81

581

உ

சிவமயம்.

# திருநீலகண்ட நாயனார் சரித்திரம்.

---

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 JAN 1934
MADRAS

வேகுப்பட்டி
சிவகாமசுந்தரி செந்தமிழ்ப் பாடசாலை
முதல் வெளியீடு.

ஆக்கியோர்,
இலக்குமணச்செட்டியார்,
வேகுப்பட்டி.

O23wx1
N34
68201

உ

சிவமயம்.

வேலுமயிலுந் துணை.

# திருநீலகண்ட நாயனார் சரித்திரம்.

OFFICE OF THE
23 JAN 1934
MADR

புதுக்கோட்டைச் சம்ஸ்தானம்
வேகுப்பட்டி
திருவாளர்
பெரி. இலக்குமணச் செட்டியாரால்
இயற்றப்பெற்றது.

வெளியிட்டோர்:—
வேகுப்பட்டி
சிவகாமசுந்தரி செந்தமிழ்ப் பாடசாலைத்
தலைவர்
திருவாளர். ஆ. பழ. பழனியப்ப செட்டியார்.

கலி ௫௲௩௰௫

விலை] 1934. [அணா 4.

உரிமை பதிவு செய்தது.

இ23ய:1
N34

மீனலோசனி அச்சியந்திரசாலே, மதுரை:—1934.

3449
922.945
68201

உ

சிவமயம்.

# முன்னுரை.

(மகிபாலன்பட்டி பண்டிதமணி, திரு. மு. கதிரேசச்செட்டியார் அவர்கள் எழுதியது.)

புதுக்கோட்டைச் சமஸ்தானத்தைச் சார்ந்த வேகுப்பட்டியிலுள்ள திருவாளர். பெரி. இலக்குமணச் செட்டியார் பாடிய திருநீலகண்டநாயனுர் சரித்திரம் என்னும் இச் சிறு நூலைப் படித்துப்பார்த்தேன். இது நாடக அரங்கில் நடிக்குங்காற் பாடுதற்குரிய முறையில் அமைந்த இசைப்பாடல்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது; பெரிய புராணத்துள்ள அந்நாயனரது வரலாற்றைத் தழுவிச் சிற்சில வேறுபாட்டுடன் இயற்றப்பெற்றுள்ளது; இடையிடையேயுள்ள விருத்தப் பாடல்களும் அழகிய வண்ணங்களில் அமைந்த இசைப்பாடல்களும் கேட்டற்கு இனிமை பயந்து மகிழ்வூட்டுகின்றன. சொன்னடையும் பிறழ்ந்து பொருணலமும் அற்று இசைவன்மையாற் பாடப்பட்டு ஒரு சிலரை மகிழ்வுறுத்தும் இக்காலத்து நாடகப்பாடல்களைப் போலாது, இச்சரிதப் பாடல்கள் இசைவன்மை குறைந்தார் பாடினும் சொற்பொருள் இனிமையால் அறிஞரை மகிழ்வுறுத்தும் தகையனவாய் அமைந்திருக்கின்றன. இதற்குக் காரணம் இதனை ஆக்கிய திரு. இலக்குமணச் செட்டியார்க்கு

அமைந்த தமிழ்மொழிப் பயிற்சியும் இசைப் பயிற்சியுமே யாம். இவர் கற்றோரிடத்தும் நண்பரிடத்தும் கலந்து மகிழும் பெற்றியுடையர்; நாடகச்சுவை நலத்திலீடுபட்டு முன்னரும் இன்னன சில இசைப்பாடல்களை இயற்றி இளைஞர் நடிக்க உதவியுள்ளார்.

இத்தகைய இவர் இயற்றிய இவ் விசைத்தமிழ் நூலை வேகுப்பட்டிச் சிவகாமசுந்தரி செந்தமிழ்ப் பாடசாலைத் தலைவரும், தமிழ்மொழி வளர்ச்சியாகிய சிறந்த அறத்தில் ஈடுபட்டுச் செய்துவருகின்றவர்களும், மேன்மேலும் நம் தாய்மொழியறிவை இளஞ்சிறார் பெற்று விளங்க வேண்டுமென்னும் ஆர்வ மேற்கொண்டு முயல்கின்றவர்களும் ஆகிய திருவாளர். ஆ. பழ. பழனியப்ப செட்டியாரவர்கள், அப்பாடசாலை வெளியீடாகப் பொருள் உதவிபுரிந்து அச்சிட்டு வெளிப்படுத்தியது பாராட்டற்பாலது. இதன் ஆசிரியர்க்கும், வெளியீட்டாளர்க்கும் இன்னோரன்ன நற்பணிகளில் ஊக்கம் அளித்து நலமுறுத்தும் வண்ணம் இறைவன் திருவருளை வேண்டுகின்றேன்.

மகிபாலன்பட்டி.
24—11—33.

மு. கதிரேசன்.

உ

சிவமயம்.

# சாற்றுக்கவிகள்.

வேகுப்பட்டி
சிவகாமசுந்தரி செந்தமிழ்ப் பாடசாலைத் தமிழ்ப்பண்டிதராகிய
வாசுதேவநல்லூர்

## திரு. M. சுப்பிரமணிய தேசிகரவர்கள்

இயற்றியவை.

### நேரிசை வெண்பா.

கேட்டார்ப் பிணிக்குந் தகுந்துளதாய்க் கேளாரும்
வேட்பவுயர் நீலகண்ட வேள்கதையை—வேட்போ
டியற்றமிழால் நல்லிசையா லின்பமுறச் செய்தான்
இயலிசையி லக்குமண னே.

### அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

திருவளரும் வேவுநகர்த் தலத்தினுறை யிலக்குமணன்
றெளிந்து சொன்ன
மருவளருங் கொன்றையணி நடராசன் பாதமலர்
வணங்கி யேத்துந்
தருவளருந் தில்லைநகர்த் திருநீல கண்டனது
சரிதப் பாபோற்
கருவளரும் பூவுலகிற் செய்பவருள் ளாரெனின்யாங்
காண்பாம் நன்றே.

மேலைச்சிவபுரிச் சன்மார்க்கசபைத்

தலைமைத் தமிழாசிரியர்

## திரு. மு. அருணாசலம்பிள்ளையவர்கள் பாடியது.

நேரிசை வெண்பா.

தில்லைத் திருநீல கண்டர் கதைத்திறத்தை
வல்ல இலக்கு மணக்குரிசில்—நல்லோர்
நடிக்கு முறையில் நவின்றனன்யார் யாரும்
படிக்கி னளிக்கும் பயன்.

---

உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

# திருநீலகண்டநாயனர்

## சரித்திரம்.

---

### சித்திவிநாயகர் துதி.

நேரிசை வெண்பா.

சீலம் பெருகுஞ் சிவனடிக்கன் பானதிரு
நீலகண் டன்சரித நேரிசைப்பேன்—பாலவடி
வேலனுக்கு முன்வந்தோன் விக்கினந்தீர் தந்திமுகன்
கோலமலர்த் தாடலைமேற் கொண்டு.

### கலைமகள் துதி.

2. அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

அண்டமெலா நிறைந்தொளிரு மருளாளன் முதன்முடிவி
லணிகொ ளீசன்
பண்டுபுகழ் வேட்கோவர் குலமதிலே யுதித்துவளர்
பண்பார் நீல
கண்டனிடந் திருவோடு பெறற்காமுன் வழக்குரைத்த
காதை கூற
வண்டரளம் விளைந்திடுவெண் வனசமுறுங் கலைமகளை
மனத்துள் வைப்பாம்.

(பூர்வம் தில்லையம்பதியின்கண் வேட்கோவர் என்னுங் குயவர் குலத்துதித்தவரும், சிவபக்தி அடியார்பக்திகளிலே சிறந்தவருமாகிய திருநீலகண்டரென்பார் ஒருவர் இருந்தார். அவர் தமது குலத்துக் கேற்ப மட்கலங்களை வனைந்து விற்றுச்சீவனஞ்செய்தும், திருவோடுகளைச்சிவனடியார்களுக்குக்கொடுத்தும், இறைவனடிமறவாதவராய் தமதுமனைவியாரோடு வாழ்ந்துவருநாளில், ஒருநாள் சிவனடியார்களின் பெருமையைப்பற்றிக் கூறும்படி சிவபக்தர்கள்வேண்ட, திருநீலகண்டர் அதற்கிசைந்து கூறுதல்.)

---

## சிவனடியார்களின் பெருமை.

### ஏன் பள்ளிகொண்டீரையா என்றமெட்டு.

3. இராகம்-மோகனம். தாளம்-ஆதி.

(பல்லவி.)

சிவனடியாரின் பெருமை செப்புவேன் கேளீர்
செயல் நிறைந்துள்ள அருமை (சிவ)

(அநுபல்லவி.)

பவமதிலேயுறு மவவினைபோக்கும்
பாரிலென்றும்பிற வாமைக்குள்ளாக்கும் (சிவ)

(சரணங்கள்.)

தவமதின்மிக்க புண்ணியன்—சீகாழிஞான
சம்பந்தனென்னுங் கண்ணியன்—உயர்
சந்தவியலருண்மி
குந்தவின்னிசைப்பதி
கந்தனையியற்றிச்சி
றந்தவென்புருவினைப்
பைங்தொடியாகவே பாரினிலழைத்தான்
பாண்டியன்சுரநோய் பறந்திடவுழைத்தான்
செந்தமிழ்ப்பேரின்பு வாரியிற்றிளைத்தான்
சீரில்சமணர்குலம் வேரறமுளைத்தான் (சிவ)

பாவுக்கரசன் உயர்ந்த—தகைசால்திரு
நாவுக்கரசன் சிறந்த—பூவிற்
பண்டுசெறிதிரைபு
ரண்டுவரும்வாரிகற்
கொண்டுமிதந்துகரை
கண்டுகளித்ததுடன்
பாம்புகடித்திறந்த பாலனையழைத்தான்
பகருதற்கரும்பெரும் பணிகளையிழைத்தான்
தீம்புனற்சடையுறுஞ் சிவனடிதிளைத்தான்
செழுந்தமிழ்மறையெனுந் திருவமுதளித்தான். (சிவ)

சுந்தரனென்னும் பெரியான்—விடையிலேறுஞ்
சோதியருளுக் குரியான்—ஈசன்
தொண்டுபுரியக்களி
கொண்டுதூதுவனுகச்
சென்றுநிகழ்ந்தகதை
பண்டுமிகுசிறப்பு

தொல்புவிதனிலிவன் றுகளறும்பதமே
சொல்லின்றடமிடங்கர் தோன்றலற்புதமே
பல்வளமிகுந்தசெந் தமிழ்மொழிக்கிதமே
பணிவுடன்புரியவந் தோனிவனிதமே. (சிவ)

ஈசன்பொற்பாத நேசனே—அருண்மாணிக்க
வாசகனென்னுந் தாசனே—உல
கெங்கும்புகழ்முத்தமிழ்ச்
சங்கமதுரைதனிற்
கங்கையுடனேகலைத்
திங்களணியுஞ்சிவ

சங்கரனருளிஞற் சார்வினைநீக்கி
தமிழ்மொழியினைத்திரு வருண்மொழியாக்கி
பொங்குநன்மடவா லூமையைப்போக்கி
புகழ்கொண்டனனிலக்கு மணன்றமிழ்நோக்கி. (சிவ)

(தில்லையம்பதியின்கண் கணிகையர் குலத்துதித்த மோகனாங்கி என்னும் ஓர் மாது இருந்தாள். அவள் ஒருநாள் தன்தோழியோடு, அந்நகரத்துச் சிங்காரச் சோலையுட் பிரவேசித்து அச்சோலைச் சிறப்பைப்புற்றித் தன் தோழியை நோக்கிக் கூறுதல்.)

---

## சிங்காரச்சோலைச் சிறப்பு.

### பரமாநந்த மெய்ப்பரங்குன்றேன் என்ற மெட்டு.

4. இராகம்—தேசிகதோடி. தாளம்—ஆதி.

(பல்லவி.)

சிங்காரச் சோலை யலங்காரம்—சீரார்கம்பீரம் (சிங்)

(அநுபல்லவி.)

தென்றல் வீசுமலர்க் கொடியகிலாரம்
மன்றலோடுபுகு மணிநதிதீரம் (சிங்)

(சரணங்கள்.)

மங்காப் பளிங்கு நன்னீ ரோடை—அதின்மிளிரும்
மச்சங்கள் செய்யும் ஜலக் கிரீடை—அதன்மருங்கில்

வந்தே யமரும் ஜோடிக் காடை—பக்கத்தில்நன்கு
வாய்ந்த சலவைக்கற்பொன் மேடை—என்னே அழகிங்

கெங்கணு மிங்கித மங்கைய ரின்னட
மாட்டம்—பால் மணமாருத்

துங்கசி ருர்களி லங்கிய பந்தய
வோட்டம்—எறியுந்திரை

பொங்கிவி ளங்கிமு ழங்குங்க டலினர்ப்
பாட்டம்—தனவணிக

சங்கநல் லார்பிர சங்கஞ்செய் யும்பெருங்
கூட்டம்—அஃதோடுசேர்ந்த

மங்கல வீணையின் வாத்திய கோஷம்
மல்லிகை முல்லைசண் பகமலர்வாசம்
எங்கினுங் கண்டதில் லையிவ்விசேஷம்
இமையவர் தமக்குங்கிட் டாவிச்சந் தோஷம்(சிங்)

செந்தாமரையல்லிநீர் வாவி—அதிலுறையுஞ்
சீரரன்னப்புட்களின் றாவி—என்னேயெழிலப்
பைந்தாரி னக்கிளைமேற் ருவி—எறுங்குரங்கின்
பண்பைக்கண்டு களிப்போம் மேவி—ஒப்புயர்வில்லாப்

பலவள மிகுந்தவிந் நிலமதை யார்மறப்
பாரே—அதோபார் தோழி
சலசல சலவென விழுமலை யருவியின்
சீரே—துன்புமிக்குற்றே

அருமரு பவர்மன நலமுற வமைந்ததிச்
சாரே—பூவினிலின்பம்
இலையென வுரைப்பவர் தலைகவிழ்ந் திடச்செயும்
பேரே—கொண்டுவிளங்கும்

இந்த வனத்தைப்போல எங்கினு முண்டோ
எழிற்கிளி மொழிதல்மாங் கனிரசத் துண்டோ
சந்தப்பண் மிழற்றுதல் தருவன வண்டோ
தனயனி லக்குமணன் றமிழுங்கற் கண்டோ (சிங்)

(கணிகை மாதாகிய மோகனாங்கி பிரவேசித்த சிங்காரச் சோலையினிடத்தே, திருநீலகண்டர், தம் தோழனோடு உலவுவதற்காக வந்தகாலத்து ஆங்கோரிடத்தில் அமர்ந்திருந்த அக்கணிகை மாதைக்கண்டு காமுற்று வருணித்தல்.)

---

5. கட்டளைக்கலித்துறை.

குயிலைப் பழிக்குங் குரலுடை யாளிவள் கோதறுசீர்க்
கயலைப் பழிக்குங் கருவிழி யாணறுங் கானமயி
லியலைப் பழிக்கு மெழிலுடை யாளொளி ரேரெகினச்
செயலைப் பழிக்கு நடையுடை யாளிந்தச் சேயிழையே.

6. அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

மலைமகளோ வெதிர்ந்தோரை மலைமகளோ செழுந்தரள
வனசப் போதி
னிலைமகளோ வெனதாவி நிலைமகளோ பசுந்தேற
னிறைவெண் கஞ்சக்
கலைமகளோ மதனணைமே கலைமகளோ வெறிதிரைநீர்க்
கடல்சூழ் பூவின்
றலைமகளோ வெனக்கேற்ற தலைமகளோ யார்கொலெனச்
சாற்று வேனே.

## செந்தாழம்பூவுந்தேன்கமழ் என்ற மெட்டு.

7. இராகம்—செஞ்சுருட்டி. தாளம்—ஏகம்.

(கண்ணிகள்.)

பைந்தேன்சிந்துஞ்செந்தார்க்குழற் பாவையாளிவள்யாவளோ
சுந்தரமதிமுகத்தாள் தொய்யிலெழுதுந்தனத்தாள்
இந்திரன்மாலய னந்தரதேவர்ம
கிழ்ந்துபணிசெயுஞ் செந்திருவைநிகர் (பைந்)

அன்னநடை மின்னலிடை யாரணங்கிவள் சாயலில்
வன்னமிகு மாமயிலோ கன்னன் மொழிக்குயிலோ
மங்கலமோங்குநீர்க் கங்கையணிசிவ
சங்கரனுமுன்ம யங்கியகன்னியோ (பைங்)

கண்ணேகயல் தண்ணேரியை கஞ்சமாமலர்த் தாளினுள்
மண்ணுலகத்து மங்கையோ வானுலகத்து நங்கையோ
மாமுனிவோர்களுங் காமுறவேதக்க
நேமம்பெறுமிவள் நாமமதென்னவோ(பைங்)

நேசப்பாரிஸ் பர்லின்லண்டன் நீணிலத்ததி காரியோ
ஆசியா தேசத்தாளோ அமெரிக்கா வாசத்தாளோ
அன்பனிலக்கும ணன்றமிழுக்கியை
இன்புளமங்கையென் அன்புக்கிசைவளோ(பைங்)

(வேசையின் நேசத்தால் வரூஉம் மோசத்தைப்பற்றித் திரு நீலகண்டர்க்குத் தோழன் அறிவுறுத்தல்.)

## அடைக்கலமே என்ற மெட்டு.

8. இராகம்—ஆரபி. தாளம்—ஆதி.

(பல்லவி.)

தாசிகளின் உறவாமா (தா)

(அநுபல்லவி.)

காசைப்பறிக்குந் துஷ்ட
காதகரான கெட்ட (தா)

(சரணங்கள்.)

பாச மிருந்தசொந்தப் பாவையர் போல
பணிமொழி யிதமுடன் பகருவார் சால
காசில்லா விடில்நம்மை யேசுவார் நீல
கண்டரே யறியுமிக் காசினிக் கோல (தா)

பணிவுடன் நம்மைப்போற்றும் பாட்டுகள் படிப்பார்
பஞ்சணை மீதினிலே பாய்ந்திதழ் கடிப்பார்
துணிவுட னமதெச்சி லினிதென்றே குடிப்பார்
துட்டுக் குறைந்துவிட்டாற் றுடைப்பத்தா லடிப்பார் ()

எழின்மிகு மிவர்களி ணிருகயல் விழியே
ஏத முறும்நரக லோகத்தின் வழியே
அழிவிலாச் சிவனடி யார்கட்குப் பழியே
ஆக்கிடு தல்நன்றோநீ ரதுபடு குழியே (தா)

கேளு மிவர்கள்தன்மை கிளரவை நடிப்பார்
கிஞ்சிற்றும் நாணமின்றி யெங்கினும் படுப்பார்
நாழிகைக் கொருபுதுச் சேலையை யுடுப்பார்
நம்பிவந் தவர்களி னற்குடிகெடுப்பார் (தா)

இவர்கள் வாங்குவதோ எழிலுறும் பணமே
இரண்டொரு நாட்களிலே தெரியுமக் குணமே
அவமிகுங் கொடுநோயுற் றரையினில் ரணமே
ஆகி யழிதல்சத்யம் அதிலென்ன மணமே (தா)

மாய வலையிற்சிக்கி மாண்டவர் கோடி
வழுத்தவென் றனலாகா தேயிதைத் தேடி
நேய முடனிலக்கு மணன்றமிழ்ப் பாடி
நீதிபோதித் தேனினி விரும்பாதிர் நாடி (தா)

(தோழனின் அறிவுறுத்தலைப் பொருட்படுத்தாமல் திருநீலகண்டர், மோகனங்கியின் இல்லஞ்சென்று தம் விரகதாபங்கூறல்.)

---

### சரசக்கார மாமா என்ற மெட்டு.

9. இராகம்—செஞ்சுருட்டி. தாளம்—ஆதி.

(கண்ணி.)

மதன சுந்தர மானே—நறு
மணங்கமழ் செழுந்தேனே—இந்த
மாநிலந்தனி லேயுனைத்தின
மேநினைந்துயிர் வாடினேனடி (மத)

(தோகையரு. ஆசிரிய விருத்தம்.)

பொல்லாத வேல்விழியாய் பொற்றொடியாய் நினதழகாம்
புணரி வீழ்ந்துன்
சொல்லார்ந்த கருணையெனுந் துறையணுக வியலாமற்
றுடிக்கின் றேன்யான்
வல்லோரும் முனிவாரும் வானவரு மயக்கமுறு
மங்காய் மாறு
சொல்லாதிங் கெனையணைந்தே சுகமளிப்பா யின்றேல்யான்
அுயர்கொள் வேனே.

(கண்ணி.)

மலரணையினிற் கூடி—நாம்
மகிழ்ந்து சுகிப்போம் நீடி—பொல்லா
மாரனேவுஞ்சீ ராரும்பூங்கணை
நேருடம்பினை யிருதேயந்தோ (மத)

(தோகையரு. ஆசிரிய விருத்தம்.)

பொட்டுக்கும் புவிமீதிற் புகழ்பெறவே பொலிந்திலங்கும் பொன்னுர் தேகக்
கட்டுக்கு மினியநறுங் குயின்மொழியாற் பரவசஞ்செய் கவினுர் வர்ண
மெட்டுக்கும் மலர்த்தடங்கைக் கொட்டுக்கு மங்கமதில் விளங்குங் காசிப்
பட்டுக்கு மிருகயற்கண் வெட்டுக்கும் மதிமயங்கிப் பலஞ்சோர்ந் தேனே.

(கண்ணி.)

சரசக்காரமாதே—எனக்
கரசிநீயிப்போதே—இந்தத்
தாலத்திலெந்த நாளுமுன் றனைச்
சீலமாய்ப்பரி பாலிப்பேனடி (மத)

(தொகையறு. ஆசிரிய விருத்தம்.)

நற்கொண்ட லுறுவிசும்பின் முழுமதியம் நிலவெறிக்கு
நன்னே ரத்திற்
கற்கண்டு சர்க்கரைதேன் கமழ்பாகுங் கனிரசமுங்
கலந்துட் கொண்டு
மற்கொண்ட வெனதுபெரும் புயமதிலே யினிதணைந்து
மதன லீலைச்
சொற்கொண்டு நறுங்கலவி யியற்றிடினே யணித்தாகுஞ்
சுவர்க்கந் தானே.

(கண்ணி.)

இலக்குமணன்சொற் பாட்டு—நுகர்ந்
தின்பத்தையெனக் கூட்டு—மெய்
யிறை சிவனடி யன்ர மறவாவென்
னிறை மனத்தினுள் ளுறை யழகிய (மத)

## கட்டிக்கரும்பே தேனே என்ற மெட்டு.

10. இராகம்—அடாணா. தாளம்—ரூபகம்.

(பல்லவி.)

வண்ணக்கிளியே மானே
வனக்கோகிலமே தேனே (வண்)

(சரணுநுபல்லவி.)

நண்ணுஞ்சோபித நகையுடையாளே
நாரியர்க்குரிய அனநடையாளே
எண்ணுதற்கரிய மினலிடையாளே
எழில்பெற்றிடு—மதர்பொற்றன
முடையாளே (வண்)

மாதே—நறுமணமிகுமலரணே
மீதே—மகிழ்ந்தணையவெழுந்தருளிப்
போதே—மிகு
மயல்பெருகிடு மென்றன்
மனங்கவரு—மிளங்கதலித்
தொடையாளே (வண்)

கண்ணே—முனிவராருமயங்குங்காமப்
பெண்ணே—தமிழ்க்கவியிலக்குமணன்சொல்
பண்ணே—தினம்
பணிவாய்க் கனிவுடனே
படிக்குமன—மினிக்குமெழி
லுடையாளே. (வண்)

(கணிகை மாது, தன்னை நாடிவந்த திருநீலகண்டரிடத்தில் தனக்குவேண்டும் பொருள்களைப்பற்றிக் கூறுதல்.)

---

## கண்யமுள்ள எந்தன் சுகுமாரா என்ற மெட்டு.

11. இராகம்—இந்துஸ்தான் காபி. தாளம்—ஆதி.

(கண்ணிகள்.)

(க) சீலமிகுந் தில்லைநகர் வாழும்—அரன்
சேவடிக் கமலத்தையெந் நாளும்—துதி
கோலமிகு மெய்யடியர் சூழும்—திரு
நீலகண்ட ரேயென்னுரை கேளும்

(உ) நாமிருக்க ஏழடுக்கு மாடி—கட்டி
நாற்புறமு மேநிலைக்கண் ணாடி—வைத்து
நேமமுடன் வாழ்ந்திருக்கக் கூடி—இந்த
நேரத்திற் புரிவீரேகொண் டாடி

(ங) கும்பகோணங் கொறநாட்டுச் சேலை—பொன்னாற்
கோத்திருக்கும் நற்கெண்டைப்பூ மாலை—அதில்
ஐம்பதுஜோ டிக்கொருகை யோலை—வரைந்
தனுப்பித் தருவிப்பீ ரிக்காலை

(ச) மூதூரில் விரைந்துவழி தாண்டும்—நல்ல
மோட்டார்க்கார்நமக்கிங்கொன்றுவேண்டும்வாங்கி
ஆதரமு டனெனையெஞ் ஞான்றும்—நீர்
அனுபவித் துக்கொள்ளுவீ ராண்டும்

(ரு) வயிரமூக் குத்திதங்கப் பொட்டு—காசி
வளர்முத்தை யாகம்பேனிப் பட்டு—அதில்
நயமாய் வாங்குவீர்சில செட்டு—யான்
நாளுங் களிக்கமதிப் பிட்டு

(சு) சிங்கப்பூர் வளைவயிரக் காப்பு—மயிர்ச்
சிகைகோதி டவோர்த ங்கச்சீப்பு—புகழ்
மங்கலில்சம் பந்தமன்கோ ஷாப்பு—சென்று
வாங்குவீ ருயர்வாசனைச் சோப்பு

(எ) காதிரண்டுக் கும்வயிரத் தோடு—நம்
காப்பிக்குவேண் டும்நல்லபா லாடு—ஒரு
கோதில்நெய்த யிர்க்குப்பசு மாடு—என்பேர்
குறித்து வாங்குவீர்பல வீடு

(அ) ஒட்டியாணந் தன்னிலொரு ஜோடி—நாம்
உலவப்போ வதற்கொரு காடி—வேண்டும்
மட்டிலா நமதருமைச் சேடி—மனம்
மகிழ்ந்து களித்திடக்கொண் டாடி

(௬) கம்மலொன்று வாங்கியளிப் பீரே—இந்தக்
கன்னிகை மனங்குளிர நேரே—என்றன்
செம்மலே எனக்குவேறி யாரே—துணை
செய்பவர் மகிழ்ந்துரைசெய் வீரே

(௰) இலக்குமணன் செந்தமிழ்ப் பாட்டு—மகிழ்ந்
தின்பமுட னேமனத்திற் கேட்டு—என்றன்
கலக்க மதைவிரைவி லோட்டும்—எனைக்
கட்டியணைந் தேயிங்கின்ப மூட்டும். (சில)

(திருநீலகண்டர் இவ்வாறு, தொல்வினைப்பயனால் தாசி கமனத்திலீடுற்றிருந்து தமது வீட்டுக்குத் திரும்ப, அதை அறிந்த அவர் மனைவியாராகிய கற்புக்கரசியார், அதைக் குறித்துத் தம்முடைய மனத்திலே தோன்றிய கோபத்தை அடக்கிக் கொண்டு, இல்வாழ்க்கைக்குரிய மற்றப்பணிகளெல்லாஞ் செய்தும், புணர்ச்சிக்கு மாத்திரம் இசையாதவரானூர். அதைக்கண்ட திருநீலகண்டர் மனைவியாரை நோக்கி ஊடலை நீக்கித் தன்னை யணையுமாறு கூறுதல்.)

## எல்லோரையும் போலவே என்ற மெட்டு.

12. இராகம்—சுருட்டி. தாளம்—ரூபகம்.

(பல்லவி.)

கொந்தார்க்குழல் பேதையேநீ
கொள்ளலாகுமோடி ஊடல் (கொந்)

(அநுபல்லவி.)

கொஞ்சுங்கிளியப ரஞ்சிதமேயென்னைக்
கூடிக்குலவிக்கொண்டாடிக்களித்திட (கொங்)

(சரணம்.)

வந்தபிணக்கைத் தள்ளல்வேண்டும்
மையலைமீக்கொள்ளல் வேண்டும்
சந்தமார்மோ கனசையோக
சரிதைசொல்ல வேண்டும்
கந்தங்கமழ்பொன் மலர்கள்சூடி
கானலக்ஷ்மண கீதம்பாடி
கண்டுசர்க்கரைதே
னுண்டுமனங்களி
கொண்டுமருவுதற்
கண்டிடாததேனே. (கொங்)

## புத்திரப்பேறில்லாமல் என்றமெட்டு.

13. இராகம்—தந்யாசி. தாளம்—ஆதி.

(பல்லவி.)

மாரன்கணையினலே கோரமாகுதேயுடல்
வந்தெனையணைவாயே (மா)

(சரணநுபல்லவி).

ஆருயிர்க்கிளியேயென் அன்பேநிறையமுதே
பாரினில்யானிவ்வாறு பரிதபித்தலும்நன்றே (மா)

தண்ணென்மலர்ப்பூங்குழல் பெண்ணேயெனக்கினிய
கண்ணேகனிரசமே கானமடமயிலே (மா)

வாதுசெய்யாதேவீணைத் தீதுசெய்யாதேயென்மேற்
கோதிருந்தாலதைநீ கூறுயிளங்குயிலே (மா)

ஊடல்நமக்குள்வேண்டாம் ஆடல்நமக்குள்வேண்டாம்
கூடலொன்றேநமக்குள் வேண்டுமெடிகோதையே. ()

## தேவகுணளா என்ற மெட்டு.

14. இராகம்-மால்கோஷ். தாளம்-ஏகம்.

(கண்ணிகள்.)

திருநீல:—மாமணிமானே மகிழ்வுறத்தானே
தாமதமேனே தனிச்செழுந்தேனே.

கற்புக்கரசி:—ஆழுங்கள்பேச்சு அறிவெலாம்போச்சு
ஆசைகொள்வேசிக் கருள்செயலாச்சு.

திருநீல:—மங்கையேகோபம் வரல்பெரும்பாபம்
இங்கெனதாசைக் கியைந்துதீர்தாபம்.

கற்புக்கரசி:—பரத்தையர்நேசம் பதிந்தமெய்வாசம்
சிரத்தையாய்நானே சேருதல்தோஷம்.

திருநீல:—தோஷமொன்றில்லை கேளென்றன்சொல்லை
தோகையேதாழேன் துயர்மதன்தொல்லை.

கற்புக்கரசி:—கணிகையர்தீண்டிக் களிப்புறுமாய்கைப்
பிணியுடலின்பம் பெறுவதைவேண்டேன்.

## மனதிற்கினிய ரெங்கோன் என்றமெட்டு.

15. இராகம்-செஞ்சுருட்டி. தாளம்-ஆதி.

(கண்ணிகள்.)

திருநீல—பெண்ணே யெனதருமைக்
கண்ணே மன் மதன்றுன்பம்
பண்ணும் விரகந்தீரடி—எனதிருக்கைப்
பக்கத்தில் வந்துசேரடி.

கற்புக்கரசி—மன்னுவிவ் வாசையினி
யெண்ண திருப்பீரிந்த
மங்கையிடத் திற்புணர்ச்சி—அஃதன்றிவேறு
வார்த்தைகூ றும்நல்லுணர்ச்சி.

திருநீல—பொன்னேர் மணியேயுனக்
கென்ன தீதுபுரிந்தேன்
புலவிதீர்த் திடற்கிசையாய்—மங்காதவின்பக்
கலவி தனக்குநசையாய்.

கற்புக்கரசி—அன்னம் படைப்பேனுற்ற
இன்னல் துடைப்பேன்மற்றை
அன்புத்தொண் டினிற்சுணங்கேன்
—வேசைபாற்சென்ற
ஆசைதனக் கிங்கிணங்கேன்.

திருநீல—மாரன் கணையால்மெய்யுங்
கோரமா குதேயந்தோ
வாராய்சிற் றின்பக்கனியே—மகிழ்ந்துசுகந்
தாரா யெனக்கிங்கினியே.

கற்புக்கரசி—அன்பு மிகுந்தஎன்றன்
அருமைக்கண் ணாளஎன்வீண்
துன்புக்குள் ளாகிடல்வேண்டும்
—நீங்கள்விரும்பும்
இன்புக் கிசையேனெஞ்ஞான்றும்.

திருநீல:—கன்னன் மொழிக்குயிலே
அன்ன நடைமயிலே
காதல்தீரடி மானே—இன்றே யினிநான்
சாதலுண்மை சொன்னேனே.

கற்புக்கரசி—கோபங்கொளல் வேண்டாமிக்
கோதை மனம்பொருந்தேன்
கோரும் விருப்பந்தாழும்—இலக்குமணன்
கூறுஞ்செந் தமிழ்க்கேளும்.

## உனை நானென்றும் மறவேனென்று உறுதியாய் நம்பு என்றமெட்டில் வேறு சந்தம்.

16. இராகம்—இந்துஸ்தான் பியாக். தாளம்—ஆதி.

(கண்ணிகள்.)

திருநீல:— மருவார்செந் தேனுறுபூங்
கூந்தல்மங்காய் சேரடி.

கற்புக்:— திருவா ரென்றன்மன்னு
வும்மைத்தீண்டேன் பாரினில்.

திருநீல:— மணியே யின்பக்கனியே
யிந்தவன்மம் ஏதுக்கோ?

கற்புக்:— கணிகைமாதின் பிணியா
ரின்பங்கண்ட சூதுக்கே.

திருநீல:— கணிகைமாதர் தமைநாடில்என்
கற்புக்குக் கேடா?

கற்புக்:— கற்புக்குக்கே டிலேயேலென்றன்
நட்புக்குக் கேடே.

திருநீல:— மானேயேனிவ் வாதேவேண்டாம்
வந்தெனைக் கூடாய்.

கற்புக்:— கோனேகுண வானேயென்மேற்
கோதுறுங் கூடேன்.

திருநீல:— வேண்டும்உன்னை யான்சேராமல்
விடுவேனே பாராய்.

கற்புக்:— தீண்டிற்பாவஞ் சேருஞ்சொன்னேன்
சேயிழை நேராய்.

(திருநீலகண்டர், மனைவியாரின் சமீபத்திற்சென்று அவரைத் தீண்டுதற்கு முயற்சிக்க; அம்மையார், தம்மைத் தொடுதல்கூடா தென்று ஆணையிடுதல்.)

---

17. அறுசீர் விருத்தம்.

தாண்டவ மாடுந் தில்லைத் தலம்வள ரீசன் முன்னாண்
மூண்டவெந் தழலான் மாய்த்த முருகலர்ப் பாணன் சீறித்
தூண்டிய சரத்தால் வாடுந் துணைவரே தொடாதிர் மீறித்
தீண்டுவி ராயி னெம்மைத் திருநீல கண்ட மாணை.

(மனைவியார் கூறிய ஆணையைக்கேட்ட திருநீலகண்டர், பரம சிவனுடைய திருநீலகண்டத்திலே தாம் வைத்த பக்தி குன்றா வண்ணம், அம்மனைவியாரைத் தொடாமல் நீங்கி, இவர் "எம்மை" என்று பன்மையாகச் சொன்னதனால் இவரை மாத்திரமன்றி மற்றப் பெண்களையும் நான் மனத்தினால் நினைத்தலுஞ் செய்யேன் என்று உறுதி கூறுதல்.)

---

68201

18. அறுசீர் விருத்தம்.

வெம்மைசே ரழலைக் காலும் விரிசுடர் வேற்க ணல்லாய்
செம்மைசேர் நீல கண்டத் திருப்பெய ராணை கூறி
எம்மையென் றதனான் மற்றை யிருநில வுலக மாதர்
தம்மையுந் தீண்டே னுள்ளந் தனினும்யா னரிக்கி லேனே.

("எம்மையென்றதனுன் மற்றை மாதரார் தம்மை யென்றன் மனத்தினுந் தீண்டேன்" என்று உறுதிகொண்ட திருநீலகண்டரும் அவர்மனைவியாரும் தங்களுடைய வீட்டினின்றும் வெளிப்புறப்படா தொழிந்து, அவ்வீட்டிற்றனே யிருந்து, இல்லறத்திற் குரிய பிற செய்கைகளெல்லாஞ் செய்துகொண்டு புணர்ச்சியின்மையைப் பிற ரறியாதவாறு வாழ்ந்தனர். இளமைப் பருவத்தையுடைய இருவரும் அவ்வாணையைப் பேணிக்கொண்டு பலஆண்டுகள்கழிய, யௌவனம் நீங்கி முதுமைப்பருவத்தை எய்தினர். வயோதிகப் பருவத்தை யடைந்தும் சிவபக்தி சிறிதும் குறையாதவர்களாகி இருந்துவருங் காலத்திலே காருண்ணியமூர்த்தியாகிய பரமசிவன் அவ் வடியாரு டைய மகிமையை உலகத்தவர்கள்அறிந்து அவருடைய தொண்டை அனுசரித்து உய்யும் பொருட்டு, ஒரு சிவயோகி வடிவங்கொண்டு நித்தியாநந்தர் என்னும் பெயருடனே திருநீலகண்டர் இல்லத்துட் பிரவேசித்தார்; அடியார் வரவைக்கண்ட திருநீலகண்டர், தம் மனைவி யுடன் அகமகிழ்ந்து, இல்லத்துள் அழைத்துச் சென்று ஓர் ஆசனத் திலிருத்தி சிவயோகியாரின் திருவடிக்கமலங்களில் வீழ்ந்து நமஸ் கரித்து உபசரித்தல்.)

---

## ஐயா பழநிமலைவேலா என்றமெட்டு.

19. இராகம்—சகாணு. தாளம்—ஆதி.

(கண்ணிகள்.)

வானோர் புகழுங்குரு நாதா—சைவ
மறைகள்கோ ஷிக்குங்குண நீதா
தேனுர் செழுங்கமலப் பாதா—இந்தச்
சேயன் பணிந்தேனருள் தாதா (வா)

சீரார் நறும்பேரின்பக் கனியே—அடி
சேர்க்க வெழுந்தகுல மணியே
ஏரார் சிவனடியார்க் கணியே—செய்யு
மிறைவ ஏற்றுக்கொள்ளுமென் பணியே. (வா)

(திருநீலகண்டர் சிவனடியாரை நோக்கி தான் செய்யவேண்டிய குற்றேவல் யாதென வினவுதல்.)

## முத்திநெறியறியாத என்ற மெட்டு.

20. இராகம்—ஆரபி. தாளம்—ஆதி.

(கண்ணி.)

அன்புறையுஞ் சிவனடியார்க் கடியரெனும் பெயர்வாய்ந்த
துன்பிரியுந் தவயோகத் தூய்யமுனி வரரேறே
இன்புறையும் இவண்வரவா லெய்தினம்யாம் பேருவகை
நன்புறையும் பெரியீரே யான்செய்வினை நவில்வீரே.

(சித்தியாநந்தர் தாம் வந்த காரியமுரைத்தல்.)

## முத்திநெறியறியாத என்ற மெட்டு.

21. இராகம்—ஆரபி. தாளம்—ஆதி.

(கண்ணி.)

அண்டமெலாம் புகழ்கொழிக்கும்
அருள்வாய்ந்த திருநீல
கண்டனெனும் பெயர்கொண்ட
கண்ணியனே சொலக்கேளாய்
தண்டரளம் விளைகமலத்
தண்மலரோன் மாலறியாப்
பண்டைநலன் வாய்ந்ததொரு
பண்பார்ந்த திருவோடு

## மேற்படி மெட்டு.

22. இராகம்—ஆரபி. தாளம்—ஆதி.

(கண்ணி.)

அப்பொருளை யுன்னிடத்தில்
அடைக்கலமா யானளிப்பேன்
மெய்ப்பொருள்போல் நீகாத்து
வேண்டும்போ தெனக்களிப்பாய்

இப்பொருட்கே யீடாகா
தீரேழு புவனமெலாம்
செப்புமென் றன் மொழிக்கிணங்கித்
திருவோடு பெறுவாயே.

(சிவயோகியாராகிய நித்தியாநந்தரால் கொடுக்கப்பெற்ற திருவோட்டை நாயனார் அன்புடன் வாங்கி வீட்டிலே ஒரு பக்கத்தில் சேமித்து வைத்துவிட்டு திரும்பிவந்து போம்படி எழுந்த சிவயோகியாருக்குப்பின் சிறிது தூரஞ்சென்று, அவரிடத்தில் விடைபெற்றுக் கொண்டு வீட்டுக்குத் திரும்பினார். பன்னாட் கழிந்தபின் ஒருநாள் பரமசிவன் தாம் வைத்திருக்கும்படி கொடுத்த திருவோட்டை வைத்த இடத்தில் இல்லா தொழியும்படி செய்து, அவ் வடியாருடைய உண்மைநிலையைப் பிறர்க்குப் புலப்படுத்தும் பொருட்டு, முன்போலச் சிவயோகி வடிவங்கொண்டு அவர் வீட்டுக்கு எழுந்தருளினார். நாயனார் சிவயோகியாரின் வரவைக்கண்டு ஆனந்த முற்று முன்போல வழிபட்டு நிற்க, சிவயோகியார், நாம் முன்னாலே உன்னிடந்தந்த திருவோட்டை இப்பொழுது தருவாயாக என்றார். நாயனார் அதைக் கொண்டுவந்து கொடுக்கும்பொருட்டு உள்ளே போய்ப் பார்த்துக் காணமையாலே திகைத்து, அங்கு நின்றவர்களிடத்தே கேட்டும், பிறவிடங்களிலே தேடியுங் காணாதவராகி, சிவயோகியாருக்கு உத்தரஞ்சொல்வதற்கு இயலாமல் அங்கே நின்றார். சிவயோகியார் உள்ளேநின்ற நாயனார் கேட்கும்படி நொடிப்பொழுதில் வருவேனென்று போன நீ என் இவ்வளவு நேரம் தாழ்த்து நிற்கின்றாய்? என்றுகூற; நாயனார் வந்து சிவயோகியாரை வணங்கித் திருவோடு காணமற் போயிற்றெனக்கூறி வேறு திருவோடு தருவேனெனல்.)

23. அறுசீர் விருத்தம்.

அருந்தவ முனிவ ரேநீ ரளித்துள திருவோ டன்றுங்
கிருந்தநல் விடத்திற் காணே னெங்கினுந் தேடிக் காணேன்
பொருந்தெழிலருமைசான்ற புதுத்திருவோடொன்றீவேன்
திருந்திய புகழீர் கொண்டிச் சேய்பிழை பொறுத்தி டீரே.

(நித்தியாநந்தர் தன்னுடைய திருவோடே வேண்டுமெனல்.)

24. அறுசீர் விருத்தம்.

என்னைநீயுரைத்தாயான்செய் யிணையிலாத்தவங்கொள்ளோடு
தன்னைநீ யென்ன செய்தாய் தனயனே யவ்வோ டன்றி
இந்நிலப்பொருள்களெல்லா மளிப்பினுங்கொள்ளேனென்றன்
றன்னிக ரில்லா வோடே தருகநீ விரைவி னின்னே.

## வெள்ளிமலையொத்தபல மேடை என்ற மெட்டு.

25. இராகம்—செஞ்சுருட்டி. தாளம்—ஆதி.

(கண்ணிகள்.)

நித்தியாநந்தர்:—நானளித் துள்ளதிரு வோடு—அந்த
வானுலகு மாகாததற் கீடு—மன

நம்பிக்கை தனிற்சிறந்தோ
னம்புவித னில்நீயென்றே
தந்தேன் மனம் நொந்தேன்.

திருநீல:—ஞான மறையுணர்ந்த முனியே—செழுந்
தேஞெழுகும் பேரின்பக் கனியே—என்னை
நம்பிநீர்தந் தவோட்டைப்போற்
செம்பொன்னுல மைத்திங்கீவேன்
ஐயா கொள்வீர் மெய்யா.

நித்தியா:—பைம்பொன்னுற்செய் துதந்தாலும்
வேண்டேன்—இந்தப்
பாரினைய ளித்தாலும்யான்
வேண்டேன்—உய
ரைம்புலன்க ளுக்குமின்ப
மளிக்குமென் மண்ஞேடன்றி
அன்பா இது துன்பா.

திருநீல:—ஐயனேயி தற்கென்செய்கு வேனே—யென்னை
ஆண்டருள வந்தபெரு மானே—யான்வே
றுய்யும்வகை யொன்றறியேன்
தாய்யனே துணைமலர்த்தாட்
கஞ்சம் சேயன் தஞ்சம்.

நித்தியா:—உனக்குமுன் னேநான்கூற விலையா—என்றன்
ஒட்டைக் கவர்ந்தபாவந் தொலையா—வீணாய்
மனக்குழப் பஞ்செய்யாம
லெனக்குரிய மண்ணோட்டைத்
தாராய் துயர் தீராய்.

திருநீல:—எப்புவியும் போற்றுங்குண நாதா—திரு
முப்புரிநூ லுந்தரித்த போதா—என்மேல்
தப்பிதமொன் றில்லையென்று
சத்தியஞ்செய் துதருவேன்
வாதா ஈதா காதா.

நித்தியா:—என்பொருளை யான்வாகாமற்
போகேன்—என்ன
துன்பமுறி னுமிதைவிட்
டேகேன்—மன்றத்
தன்பர்கள்கா ணவேயுன்னை
வன்புடன்ற ளைத்துச்செல்வே
னன்றி பாராய் வென்றி.

திருநீல:—உமதோடு யான்கவர்ந்தே னல்லேன்—என்ற
னுளத்தினு மேகளவொன் றில்லேன்—மணங்
கமழும்பைந் தேனார்செழுந்
தமிழிலக் குமணன்சொல்
நாதா மலர்ப் பாதா.

## மார்க்கத்திற்கண்டகனிதனக்குற்ற என்றமெட்டு.

26. இராகம்—அடாணா. தாளம்—ரூபகம்.

(கண்ணிகள்.)

நித்தியா:—அடைக்கலமாக வளித்த திருவோடு
கிடைக்கும்வகை யென்னவோ

திருநீல:— சீரா
ரையனே யந்தத் திருவோடு காணாத
ழிந்ததற் கென்செய்குவேன்.

நித்தியா:—இப்பெரும் வீட்டினில் நீவைத்த அப்பொருள்
எப்படிப் போய்விடுமோ

திருநீல:— என்றன்
அப்பனே யிந்தப்பே ராச்சர்யந் தன்னையே
யாருமறிந் திலரால்.

நித்தியா:—ஆச்சர்ய மென்றவீ தாச்சர்ய மேயல்லா
லப்பொருள் போகவில்லை

திருநீல:— ஒன்றுந்
தாட்சண்யம் வேண்டாமவ் வோடழிந் ததற்குச்
சத்தியஞ் செய்குவன்யான்.

நித்தியா:—அப்படி யாயினின் புத்திர னைப்பற்றி
இப்புனலில் மூழ்குவாய்

திருநீல:— நீவிர்
செப்புமொ ழிப்படி யான்புரி வேனுனற்
சேயனெ னக்கிங்கில்லை.

நித்தியா:—பெற்றசே யில்லையெ னில்நின்ம னைவிகைப்
பற்றிக்குள மூழ்குவாய்

திருநீல:— என்றன்
பொற்றொடி யாள்தனைப் பற்றும லேகுள
முற்றுயான் மூழ்குவனே.

நித்தியா:—வந்தும னைவியு டன்புனல் மூழ்கம
றுப்பதன் காரணமென்

திருநீல:— அந்தப்
பைந்தொடி யாட்குமெ னக்குமோர் சூளுரை
பண்டுநி கழ்ந்ததனல்.

நித்தியா:—ஓடுந்தா ராது மனையுடன் மூழ்காது
றைகின்ற னைவலியால்

திருநீல:— ஒன்றும்
ஈடில்பெ ருந்தவ மாமுனி நாதாவே
றென்னபு ரிகுவன்யான்.

நித்தியா:—இந்தவ ழக்கைவா முந்தணர் மன்றம்பு
குந்துமொ ழிந்திடுவேன்

திருநீல:— ஆதி
அந்தமில் பேரின்பஞ் சேர்தவத் தோய்நின்
அடியன் அவண்வருவேன்.

(நித்தியாநந்தர் அந்தணர் மன்றம் புகுந்து வழக்குரைத்தல்.)

## நந்தவனத்திலோராண்டி என்ற மெட்டு.

27. இராகம்—நாதநாமக்கிரியை. தாளம்—ஜம்பை.

(கண்ணிகள்.)

(க) சந்தமி குந்தில்லை வாழும்—மறை
யந்தணர் மன்றத்தா ரேயுரை கேளும்
எந்தன்வ ழக்கினைச் சூழும்—மனம்
ஏற்றுநி யாயம ளித்தெனை யாளும்

(உ) சிவனடி யார்களின் றெண்டன்—புகழ்
சேரும் பெயரோ திருநீல கண்டன்
அவனடி மறவாநன் மிண்டன்—வழக்
காடுவ திவ்வன் சண்டப்ர சண்டன்

(௩) மிளிரும் இவன்பால்மண் ணோடு—ஒன்று
வேண்டும்போ தேதரு வாயென்றன் போடு
அளித்துச்சென் றேன்சில நாடு—இன்று
அவ்வோட்டை யேகேட்டு நான்பட்ட பாடு

(௪) சொல்லுவே னிங்கேயிக் காலை—என்றன்
துய்யமண் ணோடு மறைந்தத னாலே
வல்லம னைவிகை மேலே—பற்றி
வண்புனல் மூழ்கி வருவாயென் றாலே

(௫) ஒப்புகின் றனிவ னில்லை—யென்மண்
ஒட்டையு மேதரு கின்றானு மில்லை
இப்படி யானதுந் தொல்லை—இதற்
கேற்ற விதமா யிசைப்பீருஞ் சொல்லை.

(திருநீலகண்டர் மன்றத்தார் முன் தமது நிலையை எடுத்துக் கூறுதல்.)

28. நேரிசை ஆசிரியப்பா.

இராகம்—ஆரபி.

சீர்கொண் டிலங்குந் தில்லையம் பதியி
லேர்கொண் டிலங்கு மிறைநட ராஜன்

றண்ணரு ளாலே யிங்கில மதனில்
வண்மையாய் வாழும் மாபெருந் தகையீர்
தொன்றுநற் சிறப்பின் றூய்மையா ரந்தண
மன்றத் தாரெனும் மாண்புடைப் பெரியீர்
நித்தியா நந்த நிருமல ருரைத்த
பக்தியார் வழக்கின் பண்பினுக் கெதிரா
வொன்றுநா னுரையே னுற்றதை யொழியே
னன்றிவர் திருவோ டளித்தது முண்மை
அன்புடன் வாங்கி யடியனில் லத்தோர்
நன்புள விடத்தில் வைத்தது முண்மை
பலநாட் கழியப் பரசிவ யோகியார்
நலநா ளின்றே யெனதக நண்ணிக்
கிளர்திரு வோட்டினைக் கேட்டது முண்மை
வளமுறு மென்னில் வைத்த விடந்தனின்
மகிழ்வுடன் பார்க்க மாயமாய் மறைந்தே
யிகலெனக் குயா விரிந்தது முண்மை
வீட்டிலுள் ளோரை வினவிய துண்மை
வாட்டமிக் குற்றே வருந்திய துண்மை
அடியார் தமக்கே யத்திரு வோட்டின்
வடிவுள தேபோன் மல்குசெம் பொன்னு
லாக்கியே யளிக்க வவர்மறுத் தனரால்
மாக்கிளர் தமது வளம்பெறு மோடே
வேண்டுமென் றிசைத்தார் மிகமன முழன்றேன்
ஆண்டஃ தின்றே லறன்மனை யாளுடன்
வாவியின் மூழ்கி வருதி ரென்றார்

ஆவல்கொண் மனையா என்றிநான் மூழ்குவ
னென்றதை யொப்பா திவண்வழக் குரைத்தார்
நன்றென யானும் நண்ணினே னீண்டே
அரனடி மறவா வறிவுடைப்
பெரியீ ரடியன் பேசுவ திவையே.

(அந்தணர் மன்றத்தார் திருநீலகண்டரை நோக்கி சிவயோகியார் தந்த திருவோட்டை நீர் இழந்தீராகில், அவர் கேள்விப்படி உம்முடைய மனைவியைக் கைப்பிடித்துக் குளத்திலே முழுகிச் சத்தியஞ் செய்து கொடுத்தலே நீதி என்றார்கள். நாயனார் அதைக் கேட்டுத் தாம் மனைவியாரைத் தீண்டாதிருத்தலைக் குறித்துப் பேச மாட்டாதவராகி, 'தகுந்தபடி குளத்திலே முழுகிச் சத்தியஞ்செய்து கொடுக்கிறேன்', என்று கூறுதல்.)

29. அறுசீர் விருத்தம்.

நயந்தரு மறையீர் நீங்க ணவின்றதன் படியே மொய்க்கும்
வியன்தரு கமலச் செம்பொன் விரிமலர் கமழு நன்னீர்க்
கயந்தனி லெனது சீர்மைக் காதன்மா மனைவி யோடு
மியைந்தநல் லாறு மூழ்கி யியம்புவேன் சரத மின்னே.

(திருப்புலீச்சரத்துக்கு முன்னிருக்கின்ற திருக்குளத்திலே போய் ஒரு மூங்கிற்றண்டை ஒரு புறத்திலே மனைவியார் பிடிக்க,

மற்றப்புறத்திலே தாம் பிடித்துக்கொண்டு இறங்கினர்; அதைக் கண்ட சிவயோகியார், 'உன் மனைவிகையைப் பிடித்துக்கொண்டு மூழ்கு' என்று கூறுதல்.)

---

30. அறுசீர் விருத்தம்.

அருந்தவ முனிவோ ரெல்லா மடைந்திலாப் புகழோ யன்பு
தருந்திரு நீல கண்டத் தனயனே மன்றத் தார்முன்
பொருந்துமா றுரைத்ததென்னே பொலிவுறுந்தண்டைநீக்கித்
திருந்திய மனையாள் கையைத் தீண்டிநீர் மூழ்கு வாயே.

---

(திருநீலகண்டர் தன் மனைவிகையைப்பற்றி மூழ்கக் கூடா மைக்குற்ற காரணங் கூறுதல்.)

---

## பாண்டியநாடுதனில் என்ற நொண்டிச்சிந்து மெட்டு.

31. இராகம்—சங்கராபரணம். தாளம்—ஆதி.

மறையுணர் முனிவரரே — யிந்த
மாநில மக்களேயான் வழுத்தக்கேண்மின்

செறிகடல் சூழும்பூவில் — இறைவன்
திருநட னம்புரியும் பெருமைமிகு
வளர்தில்லை நகரமதில் — இன்புடன்
வாழும்வேட் கோவர்குலந் தனிலுதித்தே
கிளர்சிவ னடியார்க்கு — வேண்டுங்
கேடிலாப் பணிகள்மனம் நாடிப்புரிந்து
திருநீல கண்டனென்னும் — பெயரைச்
சிறப்புடன் ருங்கினேன் பிறப்பினிலே
அருணலன் பொருணலனும் — பெற்றே
ஆதியந்த மில்லாப்பூத நாதனடியைப்
பணிவுடன் போற்றுநாளில் — இந்தப்
பாவையா ளிவளைமணம் மேவிப்புரிந்தேன்
அணிமனை யுடன்மகிழ்ந்து — இல்லற
மார்வமுட னேநடத்திச் சீர்மிகக்கொண்டு
எந்தன் குலத்தின்றெழிலைப் — பாரினி
லியற்றிப்பற் பலநலனு ஞற்றிவந்தேன்
அந்தநாளி லொருபொழுது — கணிகைமே
லாசைகொண்டு வேசையைநா னணைந்திருந்தே
பொற்புளவென் னில்லிற்குவந்தேன் — வேண்டும்
போஜனம ருந்திமிக்க நேசமுடனே
கற்புளவென் மனைவியிடம் — மிகுந்த
காதல்வார்த்தை களுரைத்தே யாதரஞ்செய்து
வேண்டியா னணையும்பொழுதே — இவளெனை
வெகுண்டுநோக் கியேமனம் வெறுத்தவளாய்த்
தீண்டுவீ ராயினெம்மை — ஞானத்
திருநீல கண்டமென்றே ஆணையிட்டனள்

சினந்தவவ் வுரைகேட்டு — மற்றைச்
சேயிழைமா தர்தமையுந் தீண்டிடேனென்று
மனந்தனி லுறுதிகொண்டேன் — அவ்வாறே
வாழ்ந்துவந் தோமிளமைப் பருவமெலாம்
கழிந்துவந் ததுமுதுமை — யின்றெந்தன்
காதலிக ரம்பற்றுத காரணமிதே
செழுந்தமி ழிலக்குமணன் — கூறுஞ்
சீரியசங் கீதம்பாடி நீரில்மூழ்குவேன். (மறை)

(முழுகிக் கரையிலேறிய நாயனாரும், மனைவியாரும் மூப்புப் பருவம் நீங்கி, இளமைப்பருவம் உடையவர்களாய்ப் பிரகாசித்தார்கள். உடனே தேவர்களும், முனிவர்களும் ஆகாயத்தினின்றும் அந் நாயனார்மீது புஷ்பமாரி பொழிந்து அவரது பெருமையைக் கூறித் துதித்தார்கள். அவ் வதிசயத்தைக்கண்ட அனைவரும் அங்குநின்ற சிவயோகியாரைக் காணுதவர்களாய் மயங்கிநின்றூர்கள். சிவபெருமான் பார்வதி தேவியாரோடும் இடபாரூடராய் ஆகாயத்திலே தோன்றியருளினர். அப்பொழுது திருநீலகண்ட நாயனாரும், மனைவியாரும் பூமியிலேவிழுந்து, அவரை நமஸ்கரித்து எழுந்து ஸ்தோத்திரஞ் செய்தார்கள். திருநீலகண்டர் பக்தியின் வயத்தராய் பாசுர மோதுதல்.)

32. எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

சோதியே சுடரே சுடர்மணி விளக்கே
துரிசிலாப் பெருமைசால் வேத
வாதியே யருளே யன்பினு ருயிரே
வாருயி ரமுதமே மதியிற்
பாதியே தரித்த பசும்புனற் சடையாய்
பாலனை யாட்கொள்வான் விசும்பின்
வீதியே மிளிரும் விமலனே யுன்றன்
விரிமலர்ப் பூம்பதம் விழைந்தேன்.

(திருநீலகண்டர் சிவபெருமானை நோக்கித் தான்செய்த் குற்றங்களை மன்னிக்குமாறு கூறுதல்.)

## முருகன் றிருமால்மருகன்பெருமை என்றமெட்டு.

33. இராகம்—அடாணு. தாளம்—ரூபகம்.

(பல்லவி.)

ஈசா அருள் வாச வுமைநேசா—இந்த
எட்டுத்திக் கெங்கணு
மட்டில் புகழ்கொண்ட (ஈசா)

(அநுபல்லவி.)

ஆசா பாசப் பவ வினையிரிந்
தகலும்படி யிகல்செய்தெனைச்
சுகவாரிதி புகவாக்கிய (ஈசா)

(சரணம்.)

மாசில்லா நின்னடி யேன்செய்த குற்றத்தை
மன்னித்தே யெந்நாளும்
நேசமு டன்மணம் வீசும லரடி
நேருறத் தந்தாளும்
வாசவன் மாலயன் போற்றும்வி னோதா
வண்கலைத் திங்க ளணிமணி நாதா
தாச னிலக்கும ணன்றமிழ்க் கீதா
தலமோங்கிய புரிதில்லையம்
பலமீதினில் நடமாடிய (ஈசா)

(சிவபெருமான் திருநீலகண்ட நாயனாரையும் அவர் மனைவியாரையும் நோக்கி, 'ஐம்புலன்களை வென்றதனாலே மேன்மையடைந்த அன்பர்களே! எக்காலத்தும் இவ் விளமை நீங்காமல் நம்மிடத்தில் இருங்கள்' என்று சொல்லி மறைந்தருளினார். பக்தி வலிமையை யுடைய திருநீலகண்ட நாயனாரும், மனைவியாரும் யாவராலும் செய்தற்கரிய பெருஞ்செய்கையைச் செய்து, சிவலோகத்தை அடைந்து பேரின்பத்தை அனுபவித்து வாழ்ந்திருந்தார்கள். சுபம்! சுபம்!! சுபம்!!!

---

வேகுப்பட்டி, சிவகாமசுந்தரி

சேந்தமிழ்ப் பாடசாலையின்

## வாழ்த்துப்பா.

34. அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

சிவநேயச் செல்வருறை வேவுநகர் தனில்வளருஞ்
சிறுவர்க் கன்பா
நவமேவு முயர்கல்வி யறிவொழுக்க மாதியபன்
னலனை யீயுந்
தவமேவுஞ் சிவகாம சுந்தரிசெந் தமிழ்ப்பாட
சாலை நீடு
புவிமீதிற் பல்லாண்டு தழைத்தோங்கத் திருவருளைப்
போற்று வோமே.

## மங்களம்.

### கலிலோஹரி என்ற மெட்டு.

35. இராகம்—காபி. தாளம்—ஆதி.

(பல்லவி.)

வடிவேலிள மயில்முருகன் றனக்கும்
மறைகட்கும் மங்களமே துங்கமிகு (வடி)

(அநுபல்லவி.)

துடியார்பட அரவமணி பரமன்
துணைவிரி மலரடிக்கும் மங்களமே. (வடி)

(சரணங்கள்.)

படிமானுட ரிறையவர் மறையவர்
பண்ணவ ரமரர்கட்கும் நிறையுஞ்சிவ
னடியார் களினிடை நடைபெறுமுய
ரரும்பெருஞ் செயல்கட்குமே மங்களமே. (வடி)

தவமேவு நீலகண்ட னின்றிருச்
சரிதையை நடித்தவர்க்கும் வேவுநகர்ச்
சிவகாம சுந்தரியின் செந்தமிழ்
திகழ்கல்வி நிலையத்திற்கும் மங்களமே. (வடி)

திருநீல கண்டன் சரிதந்தனைத்
தினம்படிப் போர்களுக்கும் கேட்போர்கட்கும்
பொருள்வாய்ந்த இலக்குமணன் மொழிக்கும்
புகழ்தருந் திருவருட்கும் மங்களமே. (வடி)

36. விருத்தம்.

மறையெலாம் வாழ்க ஈசன் மலரடி வாழ்க இன்பத்
துறையுறு நீல கண்டன் றூயநற் காதை வாழ்க
நிறைதமிழ்ப் பாட சாலை நித்தமும் வாழ்க செங்கோல்
இறையருள் வாழ்க மக்கள் இருநிலம் வாழ்க மாதோ.

முற்றுப்பெற்றது.

68201
O.23 mx 1
N34

## பிழையும் திருத்தமும்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 7 | 1 | அருமரு | அலமரு |
| 32 | 11 | யான்வாகாமற் | யான்வாங்காமற் |